வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள்: 26.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

25ஆம் ஆண்டு கார்கில் வெற்றி தினமான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, லடாக்கில், போர் வீரர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து, போரில் உயிர் நீத்த பாதுகாப்பு படையினருக்கு அஞ்சலி செலுத்தினார்.

விவசாயிகளின் நலன் கருதி, உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு தொடர்ந்து உயர்த்தி வருவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ், நாடு, பாதுகாப்புத் துறையில் சுயசார்பை எட்டி வருவதாக, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

15ஆவது புதுச்சேரி சட்டப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர், வரும் 31ஆம் தேதி புதன் கிழமை, துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது.

---

மோடி-கார்கில் 1 (17)

25ஆம் ஆண்டு கார்கில் வெற்றி தினமான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, லடாக் யூனியன் பிரதேசத்தில், டிராஸ் பகுதியில் உள்ள

கார்கில் போர் வீரர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து, போரில் உயிர் நீத்த பாதுகாப்பு படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். நாட்டிற்காக செய்யப்படும் தியாகங்கள், அழிவற்றவை என்பதையே கார்கில் வெற்றி தினம் காட்டுவதாக அவர் கூறினார்.

கடந்த காலத்தில் பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிரான சதி திட்டங்களில் பலமுறை தோற்றுவிட்ட பிறகும், தற்போது, பயங்கரவாதம் மற்றும் நிழல் யுத்தத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக, பிரதமர் தெரிவித்தார். இத்தகைய எண்ணங்கள் ஒருபோதும் வெற்றி பெறாது என்பதை பயங்கரவாதத்தின் ஆதரவாளர்களுக்கு திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்வதாகவும், இந்திய ராணுவத்தினர் தீவிரவாதத்தை முழு மூச்சுடன் ஒடுக்கி, எதிரிகளுக்கு சரியான பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு உற்பத்தித் துறையில் இந்தியாவின் உற்பத்தி ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் மதிப்பை தாண்டி இருப்பதாக பிரதமர் தெரிவித்தார். வெளிநாடுகளுக்கு ஆயுதம் ஏற்றுமதி செய்யும் நாடாகவும் இந்தியா மேம்பட்டு உள்ளதாக அவர் கூறினார்.

மோடி-கார்கில் 2 (18)

அக்னி பத் திட்டம் குறித்து எதிர்கட்சிகள் பொய் பிரச்சாரம் செய்து வருவதாக திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார். பாதுகாப்புத் துறையில் இது முக்கிய சீர்திருத்தம் என்றும், இத்திட்டத்தினால், நாட்டின் ராணுவ பலம்

அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார். முன்பு பாதுகாப்புப் படைகளை முற்றிலுமாக புறக்கணித்த அதே சக்திகள்தான், தற்போது, அக்னி பத் திட்டம் குறித்து இளைஞர்களை திசை திருப்ப முயல்வதாக அவர் குறிப்பிட்டார்.

370ஆவது அரசியல் சாசனப் பிரிவு நீக்கப்பட்டு, வரும் ஆகஸ்ட் 5ஆம் தேதி, ஐந்தாண்டுகள் பூர்த்தி ஆவதை பிரதமர் சுட்டிக் காட்டினார். ஜம்மு-காஷ்மீர் தற்போது கனவுகள் நிறைந்த புதிய எதிர்காலம் குறித்து பேசி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

லே நகருக்கு, எல்லா பருவங்களுக்கும் ஏற்ற சாலை இணைப்பு வழங்கும் வகையில், கடல் மட்டத்தில் இருந்து 15 ஆயிரத்து 800 மீட்டர் உயரத்தில், நீமு-தர்ச்சா சாலையில், ஷின்குன் லா இரட்டைக் குழல் சுரங்கப் பாதை அமைக்கும் பணிகளுக்கு மெய்நிகர் முறையில் அடிக்கல் நாட்டிய பிரதமர், லடாக் பகுதியில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதாக கூறினார். லடாக் துணை நிலை ஆளுநர் பிரிகேடியர் பி டி ஷர்மா, பாதுகாப்புத் துறை இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத், முப்படைகளின் தலைமை தளபதி திரு. அனில் சவுகான், மற்றும், முப்படை தலைவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

----------------------------------------

*நாடாளுமன்றம்-கார்கில் (9)*

இன்று, நாடாளுமன்ற இரு அவைகளிலும், கார்கில் போரில் உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கு, புகழஞ்சலி செலுத்தப்பட்டது. போரின் போது

இந்திய பாதுகாப்புப் படையினர் காட்டிய துணிச்சலும், அவர்களின் தியாகமும், எப்போதும் நினைவில் கொள்ளப்படும் என்று மக்களவையில் சபாநாயகர் திரு. ஓம்.பிர்லா கூறினார். நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த பாதுகாப்புப் படையினருக்கு நன்றி தெரிவிக்கும் உணர்வுடன் 25ஆவது கார்கில் வெற்றி தினம் கொண்டாடப் படுவதாக, மாநிலங்களவையில், அவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறினார். தொடர்ந்து இரு அவைகளிலும் 2 நிமிடம் மவுனம் அனுசரிக்கப் பட்டது.

-----------------------------------------

ஆதரவு விலை 1 (18)

விவசாயிகளின் நலன் கருதி, உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு தொடர்ந்து உயர்த்தி வருவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார். இன்று மாநிலங்களவையில், குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்ட உத்தரவாதம் அளிப்பது பற்றிய துணை கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கையில், எம்எஸ்பி தொடர்பான எல்லா பிரச்சனைகளையும், எம்எஸ்பி கமிட்டி ஆராய்ந்து வருவதாகவும், இக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார். விவசாயிகளுக்கு அரசு, 1 லட்சத்து 68 ஆயிரம் கோடி ரூபாய் உர மானியம் வழங்கி வருவதாகவும், பிஎம் கிசான் திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவி விவசாயிகளுக்கு வழங்கப் படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மத்தியில்,

காங்கிரஸ் ஆட்சியில் இருந்த போது, ஸ்வாமிநாதன் கமிட்டி பரிந்துரைகளை ஏற்க மறுத்து விட்டதாக அவர் குறிப்பிட்டார். இப்பிரச்சனை தொடர்பாக, ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும், எதிர்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. காங்கிரஸ் உறுப்பினர் திரு. ரண்தீப் சுர்ஜேவாலா அவையில் நடந்து கொண்ட விதத்தை, அவைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் ஆட்சேபித்தார். அவையின் அலுவல்களை எதிர்கட்சிகள் தடைபடுத்துவது, முன் கூட்டியே திட்டமிட்ட யுக்தி என்று அமைச்சர் திரு.

ஆதரவு விலை 2 (6)

ப்யூஷ் கோயல் கூறினார். விவசாயிகளின் நலன் என்ற பெயரில், எதிர்கட்சிகள் அரசியல் செய்வதாக மத்திய வேளாண் அமைச்சர் குற்றம் சாட்டினார். அமைச்சரின் பதில் திருப்திகரமாக இல்லை என்று கூறி காங்கிரஸ், திரணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். காங்கிரஸ் எம்பிக்கள் பின்னர் நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

-----------------------------------------

வைஷ்ணவ் (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ் நாடு பாதுகாப்புத் துறையில் சுயசார்பை எட்டி வருவதாக, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதுகாப்புப் படைகளுக்குத் தேவையான

70 சதவிகித ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் தற்போது உள்நாட்டிலேயே தயாரிக்கப் படுவதாக தெரிவித்தார். இந்தியாவில் உற்பத்தியாகும் பாதுகாப்பு உபகரணங்கள் 80 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதாகவும். இதுவரை சுமார் 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். பாதுகாப்புத் துறையில் அரசு கடந்த 10 ஆண்டுகளில், பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்து இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார். முந்தைய காங்கிரஸ் ஆட்சியின் போது, எல்லைப் பகுதிகளில் சாலைகளே இல்லாத நிலையில், தற்போது, 6 ஆயிரத்து 800 கிலோ மீட்டர் அளவிற்கு எல்லைப்புற சாலைகள் அமைக்கப் பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

---------------------------------------

*புதுச்சேரி சட்டமன்றம் (10)*

15ஆவது புதுச்சேரி சட்டப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர், வரும் 31ஆம் தேதி புதன் கிழமை தொடங்க உள்ளது. அன்றைய தினம் 9.30 மணிக்கு சட்டப் பேரவை கூடும் என்றும், துணை நிலை ஆளுநர் அவையில் உரை நிகழ்த்துவார் என்றும் சட்டப் பேரவைச் செயலர் திரு. தயாளன் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். இக்கூட்டத் தொடரில், நிதித் துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நடப்பு நிதியாண்டிற்கான முழு பட்ஜெட்டை ஆகஸ்ட் 2ஆம் தேதி அவையில் தாக்கல் செய்கிறார். கூட்டத் தொடரை எத்தனை நாட்களுக்கு நடத்துவது என்பது

குறித்து அவையின் அலுவல் ஆலோசனைக் குழு முடிவு செய்யும் என்று சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் தெரிவித்துள்ளார்.

----------------------------------------

*புதுச்சேரி-கார்கில் (18)*

கார்கில் வெற்றி தினம் இன்று புதுச்சேரியில், கடற்கரை சாலையில், பிரெஞ்ச் தூதரகம் எதிரே அமைந்துள்ள போர் வீரர் நினைவு சின்னத்தில், அரசு சார்பில் கொண்டாடப் பட்டது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி போர் வீரர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து, கார்கில் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம், திரு. பி.ஆர்.என் திருமுருகன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, அரசுக்கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கேஎஸ்பி. ரமேஷ், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. சம்பத், திரு. அசோக் பாபு, மற்றும், மூத்த அதிகாரிகள், போர் வீரர் நினைவுச் சின்னத்தில் மலரஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து 2 நிமிடம் மவுனம் அனுசரிக்கப்பட்டது. கார்கில் வெற்றி தினத்தின் வெள்ளி விழாவை ஒட்டி, கார்கில் போரில் பங்கேற்ற புதுச்சேரி ராணுவ வீரர்களுக்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சால்வை அணிவித்தும், நினைவு பரிசு வழங்கியும் கவுரவித்தார். கார்கில் வெற்றி வீரர்களின் துணிச்சல், வீரம் மற்றும் தியாகத்தை, நாடு எப்போதும் நினைவில் கொள்ளும் என்றும், நாட்டிற்காக இன்னுயிரை ஈந்த தியாக மறவர்களுக்கு வீர

வணக்கம் செலுத்திக் கொள்வதாகவும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி கார்கில் வெற்றி தின செய்தியில் கூறியுள்ளார்.

----------------------------------------

நட்டா (14)

உலகின் மருந்தகமாக இந்தியா மேம்பட்டு உள்ளதாகவும், உலகிலேயே மிக குறைந்த விலையில் அதிக திறன் வாய்ந்த மருந்துகள் இந்தியாவில் தயாரிக்கப் படுவதாகவும், மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜே.பி நட்டா கூறியுள்ளார். இன்று மக்களவையில் துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், மருந்தாக்கத் துறையை வலுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாக தெரிவித்தார். மருந்தாக்கத் தொழில்நுட்பத்தை தரம் உயர்த்த நிதி உதவி வழங்குவதற்கான புதுப்பிக்கப்பட்ட திட்டத்தின் கீழ், சிறு-குறு மற்றும் நடுத்தர மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு அரசு ஆதரவு அளித்து வருவதாகவும், அவர் கூறினார். இந்திய மருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முன்பாக, உள்நாட்டு அளவில், மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப் படுவதாக அமைச்சர் தெரிவித்தார். இந்திய மருந்துகளுக்கு, உலக அளவில் தேவை இருப்பதால், மருந்துகளின் தரத்தை உயர்த்துவதன் மூலம், மருந்து ஏற்றுமதியில் உலகின் முதல் நாடாக இந்தியா மேம்பட முடியும் என்று, சபாநாயகர் திரு. ஓம். பிர்லா கருத்து வெளியிட்டார்.

----------------------------------------

ஜன் அவுஷதி (9)

2027ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதிக்குள், நாடு முழுவதும் 25 ஆயிரம் ஜன் அவுஷதி கேந்திரங்களை செயல்படுத்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. மத்திய ரசாயனத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதை தெரிவித்தார். நாடு முழுவதிலும் கடந்த ஜூன் மாதம் வரை, தொடக்க நிலை வேளாண் கூட்டுறவுச் சங்கங்களில் 547 ஜன் அவுஷதி கேந்திரங்கள் அமைக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். பிரதமரின் பாரதீய ஜன் அவுஷதி திட்டத்தின் கீழ், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருந்துகள், மற்றும், 3 ஆயிரம் மருத்துவ நுகர்வு பொருட்கள் மக்கள் மருந்தகங்களில் மலிவு விலையில் விற்கப் படுகின்றன.

----------------------------------------

விளைபொருள் (13)

மும்பை ஜவஹர்லால் நேரு துறைமுக வளாகத்தில், வேளாண் விளை பொருட்களை பதப்படுத்தி சேமிக்கும் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த ஏற்றுமதி-இறக்குமதி வசதி மையம் ஒன்றை அமைக்கும் உத்தேசத்திற்கு, மத்திய கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் ஒப்புதல் அளித்துள்ளார். அரசு-தனியார் ஒத்துழைப்புத் திட்டமாக, 284 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ள இம்மையத்தினால், வேளாண் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், விளைச்சல் வீணாவதை தடுக்கவும் ஏதுவாகும் என்று

அமைச்சர் தெரிவித்துள்ளார். பாஸ்மதி அல்லாத அரிசி,கோதுமை, மக்காச் சோளம், வெங்காயம் உள்ளிட்ட முக்கிய வேளாண் விளை பொருட்களின் ஏற்றுமதிக்கு தேவையான உதவிகள் இம்மையத்தில் வழங்கப்படும் என்றும், இதனால், நாட்டில் வேளாண் துறை ஊக்கம் பெற்று, விவசாயிகளின் அதிகாரப் பங்கேப்பு மேம்படும் என்றும் அவர் கூறினார்.

---------------------------------------

பட்ஜெட் கூட்டம் (16)

வரி விதிப்பு மற்றும் வரி வசூல் நடைமுறைகளை எளிமையாக்கவும், காகிதம் அற்ற நடைமுறைகளாக மாற்றவும், அரசு, உறுதி பூண்டுள்ளதாக மத்திய அரசின் வருவாய்த் துறைச் செயலர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார். அசோச்சேம் தொழில்-வர்த்தகக் கூட்டமைப்பின் சார்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, பட்ஜெட்டிற்குப் பிந்தைய மாநாட்டில் அவர் பேசுகையில், முதலீடுகளை பெருக்கவும், வளர்ச்சியைத் தூண்டி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகக் கூறினார். இதற்கிடையே, நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட், நாட்டின் பொருளாதார எதிர்காலம் பற்றிய தொலை நோக்கு ஆவணமே தவிர, வெறும் நிதியறிக்கை அல்ல என்று, மத்திய மறைமுக வரிகள் வாரியத்தின் தலைவர் திரு. சஞ்சய் குமார் கூறியுள்ளார். வளர்ச்சி, வேலை வாய்ப்பு, மற்றும், மேம்பாட்டிற்கு வழிகாட்டும் வரைபடமாகவே பட்ஜெட் அமைந்து இருப்பதாக அவர்

தெரிவித்தார். நிதி நடைமுறைகளை எளிமையாக்கவும், செம்மைப் படுத்தவும், பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளதாக, மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவர் திரு. ரவி அகர்வால் கூறியுள்ளார்.

----------------------------------------

*ஜெய்சங்கர் (12)*

கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கையிலும், இந்தோ-பசிபிக் பிராந்தியம் பற்றிய இந்தியாவின் பார்வையிலும், ஆசியான் நாடுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் இருப்பதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். இன்று லாவோஸ் நாட்டின் வியன்டியேன் நகரில், ஆசியான்-இந்தியா வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் தொடக்க அமர்வில் உரையாற்றிய அவர், ஆசியான் நாடுகள் உடனான அரசியல்-பொருளாதார, மற்றும், பாதுகாப்பு ஒத்துழைப்பிற்கு, இந்தியா மிகுந்த முன்னுரிமை அளிப்பதாக கூறினார். இந்தியாவிற்கும், ஆசியான் நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பில், பாதுகாப்பு, போக்குவரத்து தொடர்புகள், கடல்சார் உறவுகள், டிஜிட்டல் சீர்திருத்தம், கலாச்சார மரபுகளின் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளுக்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப் படுவதாக டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

----------------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

25ஆம் ஆண்டு கார்கில் வெற்றி தினமான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, லடாக்கில், போர் வீரர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து, போரில் உயிர் நீத்த பாதுகாப்பு படையினருக்கு அஞ்சலி செலுத்தினார்.

விவசாயிகளின் நலன் கருதி, உணவு தானியங்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசு தொடர்ந்து உயர்த்தி வருவதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ், நாடு, பாதுகாப்புத் துறையில் சுயசார்பை எட்டி வருவதாக, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

15ஆவது புதுச்சேரி சட்டப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர், வரும் 31ஆம் தேதி புதன் கிழமை, துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்க உள்ளது.